**புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப்பணியகம், மற்றும் அதன் துணைக்கம்பனி – 2023**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப்பணியகத்தினதும் (''பணியகம்'') மற்றும் அதன் துணைக்கம்பனியினதும் (''தொகுதி'') 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து பணியகத்தினதும் தொகுதியினதும் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதி செயலாற்றல் மற்றும் அதன் காசுப்பாய்ச்சல் என்பன இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்பு**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்பித்தல் மற்றும் மோசடி தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாட்டுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பணியகத்தினதும் தொகுதியினதும் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்தல் மற்றும் முகாமைத்துவமானது பணியகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்தல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பணியகத்தினதும் தொகுதியினதும் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பணியகம் மற்றும் தொகுதி என்பன வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள்,

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்து பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளைகளிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல் மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றினைவிடக் கூடியதாகும்.
- சந்தர்ப்பங்களிற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேன்றி பேரவையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோககத்தில் அல்ல.
- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதீப்பீடு செய்தல்.
- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பேரவைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என நான் முடிவுக்கு வந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கை திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பேரவையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதீப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பணியகத்தினதும் தொகுதியினதும் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதீப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,
- பணியகம் மற்றும் தொகுதியின் ஆளுகை சபையினால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்து மூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பணியகம் மற்றும் தொகுதி என்பன இணங்கியிருந்ததா என்பதும்,
- பணியகத்தினதும் தொகுதியினதும் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பில் கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகம்

#### 1.5.1.1 கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் 106 முதல் 115 வரையான பந்திகளின் பிரகாரம் தொகுதி மற்றும் பணியகத்தின் விரிவான வருமானக் கூற்றின் முகப்பில் குறிப்பிடப்பட்டுள்ள உருப்படிகள் தொடர்பான விளக்கக் குறிப்புக்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. | இது தொடர்பான குறிப்புக்களை உரிய நேரத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் விரிவான வருமானக்கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள உருப்படிகள் தொடர்பான விளக்கக் குறிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பணியகத்தின் புதிய ஆய்வுகூட கட்டிடம் மற்றும் குருநாகலையில் உள்ள அலுவலக கட்டிடம் என்பவற்றின் நிர்மாணப் பணிகள் முடிவடைந்த பின்னர் பயன்பாட்டில் உள்ள போதிலும் அதற்காக ஏற்பட்ட செலவுகள் முறையே ரூபா 421,620,219 மற்றும் ரூபா 7,820,949 தொகைகள் நடைமுறை வேலையாக காட்டப்பட்டுள்ளது. இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 69 ஆம் பந்தியின் பிரகாரம் பின்பற்றத் தவறியமையினால் ஆண்டிற்கான கட்டிட பெறுமானத் தேய்வு ரூபா 21,472,058 தொகையினால் நிதிக்கூற்றுக்களில் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. | 2024 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் சொத்துக்கள் மற்றும் பெறுமானத் தேய்வுகள் சரியாக கணக்கிற்கு கொண்டு வரப்பட வேண்டும். . |

| | | |
|---|---|---|
| (இ) ''பிந்தைய சேவை நலன்கள்'' என 2023 திசெம்பர் 31 இல் உள்ளபடியாக ரூபா 328,203,924 தொகை காட்டப்பட்டுள்ள போதிலும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 19 இன் 61 ஆம் பந்தியின் பிரகாரம் ஊழியர்களினால் ஈட்டப்பட்ட நலன்களின் பெறுமதியை நம்பகத்தன்மையுடன் மதிப்பிடுவதற்கு அளவீட்டு நுட்பங்களை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | பணிக்கொடை செலுத்துவதற்கான ஒதுக்கீடுகள் சரியாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் அளவீட்டு நுடபங்கள் பயன்படுத்தப்பட வேண்டும். |

### 1.5.1.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அ) நில புனரமைப்புக்காக அனுபத்திரங்கள் மூலம் பெறப்பட்ட ரூபா 463,177,325 தொகை வங்கி பிணையங்கள் காலாவதியான பிறகு பணமாக்கப்பட்டு நிலையான வைப்பு மற்றும் நடைமுறைக் கணக்குகளில் வைப்பிடப்பட்டது. அந்த மதிப்பு குறிப்பிடுகின்ற நில மறுசீரமைப்பு நிதியக் கணக்கு மீதி 383,426,675 தொகையில் இருந்து ரூபா 79,750,650 தொகை வித்தியாசம் காணப்பட்டது. | இந்த வேறுபாட்டிற்கு காரணம் யாதெனில் புனரமைப்பு முறிக் கணக்கின் வட்டி மற்றும் நடைமுறை ஆண்டில் மறுசீரமைப்பு முறி கணக்கு மீதிகளில் இருந்து அறவிடப்பட்ட கள பரிசோதனைக் கட்டணங்கள் முதலியன வருமான கள பரிசோதனை கட்டணங்கள் தொடர்பான கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டதுடன், ஏனையவை தொடர்பான வரிகள் அந்தந்த கணக்குகளில் செலவு வைக்கப்பட்டது. | நிலம் புனரமைப்பு நிதி விடுவிக்கப்பட்டதன் மூலம் பெறப்பட்ட பணங்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| ஆ) மணல், மண் மற்றும் க்ரவல் போன்றவற்றினை நாடளாவிய ரீதியில் பிரதேச செயலகங்களின் ஊடாக அனுமதிப்பத்திரங்களை வழங்குவதன் மூலம் சேகரிக்கப்பட்ட ரூபா 26,495,395 வருமானத்தினை, வருமானமாக கணக்கிற்கு கொண்டு வரப்படுவதற்கு பதிலாக தொங்கலில் மீதியாக காட்டப்பட்டுள்ளது. | பிரதேச செயலகங்கள் மூலம் மணல், மண் மற்றும் க்ரவல் அள்ளுவதற்கு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களுக்குரிய தொகை கணக்குகளுக்கு கொண்டு வரப்பட வேண்டும். | போக்குவரத்து அனுமதிப்பத்திர வருமானம் சரியான வருமானத் தலைப்பின் கீழ் கணக்கிற்கு கொண்டுவரப்பட வேண்டும். |
| இ) 2022 ஜனவரி மாதம் முதல் மீளாய்வாண்டின் இறுதி வரை வாடிக்கையாளர்களினால் பணியகத்தின் வங்கி கணக்கிற்கு நேரடியாக செலவு வைக்கப்பட்ட ரூபா 17,516,623 தொகையினை இனங்கண்டு கணக்கு வைப்பதற்கு பதிலாக செலுத்த வேண்டிய மீதியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளது. | வாடிக்கையாளர்களினால் பணியகத்தின் வங்கிக் கணக்கிற்கு நேரடியாக வைப்புச் செய்யப்பட்ட பணமானது, வாடிக்கையாளர்களினை இனங்கண்டு பெறுவனவு சீட்டுக்களிளை வழங்கும் வரை மாத்திரம் செலுத்தவேண்டிய கணக்குகளில் காட்டப்பட்டுள்ளதுடன், இந்த நேரடி வைப்புத் தொகை குறித்து உரிய பிரிவுகளினால் ஏன் இந்தக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகின்ற என்று | நேரடி வைப்புக்கள் இனங்காணப்பட்டு கணக்குகளிற்கு கொண்டு வரப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | எதிர்காலத்தில் நிதிப்பிரிவிற்கு தெரிவிக்கப்படும். | |
| ஈ) | நிகர பெறுமதி ரூபா 13,680,042 தொகையுடைய மோட்டார் வாகனங்கள் மீளாய்வாண்டில் ரூபா 418,125,000 தொகைக்கு மீள்மதிப்பீடு செய்யப்பட்டதன் விளைவாக தோன்றிய ரூபா 404,444,958 மீள்மதிப்பீட்டு மிகையினை ரூபா 418,125,000 தொகையாக மீள்மதிப்பீட்டு ஒதுக்கக் கணக்கிற்கு செலவு வைத்து, வருமானத்தில் இருந்து குறைத்து காட்டப்பட்டதனால் மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் ரூபா 13,680,042 தொகையினால் அதிகரித்து அதே தொகையினால் இலாபம் குறைவாக காட்டப்பட்டுள்ளது. | இதனை எதிர்காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்து மீள்மதிப்பீட்டு மிகையினை சரியாக கணக்கிற்கு கொண்டு வரப்பட வேண்டும். |

### 1.5.1.3 கணக்காய்விற்காக எழுத்துபூர்வ சான்றின்மை

| விடயம் | தொகை ரூபா | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்று | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| ஏனைய செலுத்தவேண்டிய முற்பணங்களின் கீழ் காட்டப்பட்டுள்ள போக்குவரத்து, சுரங்க மற்றும் ஆராய்ச்சி அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்காக பெறப்பட்ட ரூபா 194,454,748 தொகையுடைய முற்பணங்கள் தொடர்பில் விரிவான அட்டவணை மற்றும் வயதுப் பகுப்பாய்வு என்பன கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையினால் அதன் துல்லியத்தை உறுதிப்படுத்த முடியவில்லை. | 194,454,748 | விரிவான அட்டவணைகள் மற்றும் வயதுப் பகுப்பாய்வு | பணியகம் அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு முன் அனுமதிப் பத்திரங்களினை பெறுபவர்கள் அனுமதிப்பத்தித்திற்கு விண்ணப்பிக்கும் போது முதன் முதலில் அனுமதிக்கட்டணத்தை முற்பணமாக முன்கூட்டியே வசூலிப்பது பணியகம் பின்பற்றப்படுகின்ற ஒரு வழிமுறையாகும். அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டவுடன் முற்பணக் கணக்கில் இருந்து வருமானக் கணக்கிற்கு இந்த தொகை மாற்றப்படும். அது வரை இந்த தொகை செலுத்த வேண்டிய | கணக்காய்விற்கு தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | முற்பணமாக வைக்கப்படும். அதற்காக 2023 ஆம் ஆண்டு முதல் வயதுப் பகுப்பாய்வு வழங்கப்பட்டுள்ளது. முந்தைய ஆண்டுகளுக்கான கோவைகளை பரீட்சித்து, செலுத்த வேண்டிய முற்பணக் கணக்குகளில் பேண வேண்டிய முற்பண தொகையை நிதி அறிக்கையுடன் சமர்ப்பிப்பதற்கு உரிய பிரிவுகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | |

**1.5.2 ஜீ.எஸ்.எம்.பி தொழில்நுட்ப சேவைகள் (தனியார்) கம்பனி**

**1.5.2.1 கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சிறிய மற்றும் நடுத்தரளவிலான நிறுவனங்களிற்கான இலங்கை பொதுத் துறை நியமம் 17 இன் 19 ஆம் பந்தியின் பிரகாரம் முழுமையாக பெறுமானத் தேய்வடைந்த ரூபா 90,853,735 கிரயமுடைய நடைமுறையல்லாத சொத்துக்களின் 1109 உருப்படிகள் கம்பனியினால் தொடர்ந்து பயன்படுத்தி வந்துள்ளதுடன் நிதிக்கூற்றுக்களில் நியாயமான பெறுமதியை வெளிப்படுத்துவதற்காக அந்த சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் மற்றும் இழிவுப் பெறுமதி என்பவற்றை மீள்மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | கணக்கீட்டு நியமங்களின் படி சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்யும் போது தொடர்புடைய சகல சொத்து வகுப்புக்களும் மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டுமென்பதால் நிதிச் செலவு, காலம் மற்றும் சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்தல் ஆகியவற்றை கருத்திற்கொண்டு நிறுவனத்திற்கு கிடைக்கும் பொருளாதார நன்மைகளை கருத்தில் எடுக்கப்படவில்லை. சொத்துக்களின் கொண்டு செல்லும் பெறுமதி மற்றும் நியாயமான பெறுமதி என்பவற்றுக்கிடையில் பொருண்மையான வேறுபாடுகள் எதுவுமில்லை என்று கருதப்படுகிறது. தற்போதைய கணக்கீட்டு நியமங்கிளின் படி சொத்துக்கள் மீள்மதிப்பிடப்படாது என்று 2018.12.31 இல் திறைசேரியின் செயலாளர் தெரிவித்துள்ளார்.<br><br>இது தொடர்பான விளக்கம் கணக்கீட்டு நியமம் 3.07.d இல் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளதுடன் கணக்கு குறிப்பு இல 12.3 மூலம் மேலும் தெளிவுபடுத்த எதிர்பார்க்கப்படுகிறது. | கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் சொத்துக்களின் நியாயமான பெறுமதி காட்டப்பட வேண்டும். |

#### 1.5.2.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| அ) | மன்னம்பிட்டி மணல் செயற்திட்டத்தின் அரசுரிமைப்பணம் மற்றும் அனுமதிப்பத்திர கட்டணச் செலவு ரூபா 86,352,396 தொகையாக இருந்த போதிலும் அந்த செலவு ரூபா 8,280,047 தொகையினால் குறைத்து ரூபா 78,072,349 என்று நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டதனால் இலாபம் அந்த பெறுமதியினால் உயர்த்தி காட்டப்பட்டுள்ளது. | நீங்கள் குறிப்பிட்ட கணக்காய்வு விசாரணையின் படி மன்னம்பிட்டி செயற்திட்டத்தின் அடிப்படையில் அரசுரிமைப்பணம் மற்றும் அனுமதிப்பத்திர கட்டணங்கள் என்பன கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது. எனினும், நிதிக்கூற்றுக்களில் செலவினமாக காட்டப்பட்டுள்ள நிலுவையினை பின்வருமாறு தொகுக்கலாம்.<br><br>எங்களின் நிதிக்கூற்றுக்களில் மன்னம்பிட்டிய தொடர்பான செலவினம் ரூபா 76,659,980 தொகையாகும். இங்குள்ள வித்தியாசம் ரூபா 9,692,416 தொகையாகும், மற்றும் இதற்கு காரணம் யாதெனில் 2022 ஆம் ஆணடின் போது எங்களினால் அதிகமாக ஒதுக்கிய ஏற்பாட்டை சீராக்கியமாகும். | அகழப்பட்ட பரப்பின் அடிப்படையில் அரசுரிமைப்பணம் சரியாக கணிப்பிடப்பட்டு கணக்குகளுக்கு கொண் வரப்பட வேண்டும். |
| ஆ) | 2022 யூலை 10 ஆம் திகதி முதல் செயல்படாமல் உள்ள கந்தளாய் மணல் அகழ்வுத்திட்டத்தில் 2023 திசெம்பர் 31 இல் உள்ளபடியாக மணல் இருப்பு எதுவும் இருக்கவில்லையாயினும் மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் ரூபா 10,603,916 பெறுமதியுடைய மணல் இருப்பு காட்டப்பட்டிருந்தது. இதன் விளைவாக நிதிக்கூற்றுக்களில் அந்த தொகையினால் இருப்பு அதிகமாகவும் மற்றும் அதே தொகையினால் இலாபம் குறைவாகவும் காட்டப்பட்டிருந்தது. இந்த இருப்பு பற்றாக்குறை காரணமாக இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | கந்தளாய் மணல் அகழ்வு செயற்திட்டம் தொடர்பாக புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம் மற்றும் எமது நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியினால் நியமிக்கப்பட்ட கம்பனியின் பல்வேறு பிரிவுகளில் இருந்து உறுப்பினர்களை உள்ளடக்கிய குழுவொன்றின் மூலம் 2023 ஆம் ஆண்டு ஒரு விஷேட விசாரணை நடத்தப்பட்டது. இந்த விசாரணை அறிக்கையினை தலைவர், பிரதம நிறைவேற்று அதிகாரி, கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு, இயக்குனர் சபை மற்றும் சுற்றாடல் அமைச்சு என்பவற்றுக்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன், இந்த அறிக்கையின் பரிந்துரைகள் மற்றும் வழிகாட்டிகளின் அடிப்படையில் எதிர்காலத்தில் இருப்புப் பற்றாக்குறையினை சீர்செய்து மேலதிக நடவடிக்கைகளை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. | இருப்பு பௌதீக ரீதியாக சரிபார்க்கப்பட்டு துல்லியத்தினை உறுதி செய்த பின்னர் கணக்குகளிற்கு கொண்டு வரப்பட வேண்டும். இருப்பு பற்றாக்குறைக்கு காரணமான பொறுப்புடைய அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| அ) | பணியகத்தின் துணைக் கம்பனியான ஜீ.எஸ்.எம்.பீ தொழில்நுட்ப சேவைகள் (பிறைவேட்) கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் பணியகத்திடம் இருந்து கம்பனிக்கு பெற | மிகையாக செலுத்தப்பட்ட அரசுரிமைப்பணத்தினை 2023 ஆம் ஆண்டின் பாதீட்டு காலாண்டிற்காக செலுத்த | பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய மீதிகள் |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டிய மீதியாக கம்பனியினால் மிகையாக செலுத்தப்பட்ட ரூபா 5,794,943 தொகையான அரசுரிமைப்பணம் தொடர்பான செலவினம் இனங்காணப்பட்ட போதிலும், பணியகத்தின் நிதிக்கூற்றுக்களில் அந்த நிலுவையை செலுத்த வேண்டிய பெறுமதியாக இனங்காணப்படவில்லை. மன்னம்பிட்டிய மணல் அகழ்வு செயற்திட்டத்தின் கள பரீட்சிப்புக்கள் தொடர்பாக பணியகத்திற்கு செலுத்தப்பட வேண்டிய ரூபா 1,487,602 தொகை கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் செலுத்த வேண்டிய மீதியாக இனங்காணப்பட்ட போதிலும் பணியகத்தின் நிதிக்கூற்றுக்களில் அந்த தொகை பெறவேண்டிய மீதியாக இனங்காணப்படவில்லை. | வேண்டிய அரசுரிமைப்பணத்திற்கு எதிராக எதிரீடு செய்யப்பட்டது. துணைக் கம்பனியினால் இனங்காணப்பட்டாலும் பணியகத்திடம் தெரிவிக்கப்படாத செலுத்த வேண்டிய மீதி ரூபா 1,487,602 தொகையாகும். இது துணைக் கம்பனியினால் பணியகத்திற்கு தெரிவிக்கப்படவில்லை. | தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும். |
| ஆ) | 2009-2022 காலப்பகுதியுடன் தொடர்புடைய வழங்குனர்களுக்கு செலுத்த வேண்டிய மொத்தம் ரூபா 2,031,643 தொகை நிலுவையினை தீர்ப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இந்த தகவலை பழைய கோப்புகளில் இருந்து கண்டறிந்து தீர்க்க வேண்டியிருப்பதனால் அடுத்த 14 நாட்களுக்குள் விளக்கங்கள் வழங்கப்படும் என்பதை அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன். | பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய மீதிகள் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| அ) 2009 இன் 66 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 1992 இன் 33 ஆம் இலக்க சுரங்கங்கள் மற்றும் கனிப்பொருள் சட்டம் | | | |
| (i) 12(உ) ஆம் பிரிவு | கனியங்களுக்கான பெறுமதியை சேர்ப்பதற்காக பயன்படுத்தப்பட வேண்டிய படிமுறைகள் பணியகத்தினால் அறிமுகப்படுத்தப்படாமையின் காரணமாக அகழப்படுகின்ற காரியம், கனிய மணல் மற்றும் பளிங்கு போன்ற கனிப்பொருட்களுக்காக பெறுமதி சேர்க்காமல் மூலப் பொருளாக ஏற்றுமதி | கனியப்பொருளுக்கான பெறுமதி கூட்டல் நிர்ணயித்தலினை உள்ளடக்கிய அறிக்கை அமைச்சருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பணியகம் அதன் செயற்பாடுகளினை நிறைவேற்றும் போது உருவான தரவு வரைபட அறிக்கைகள் மற்றும் கனியப்பொருள் ஆண்டு புத்தகம் ஆகியவற்றின் ஊடாக பிரசித்தப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், இந்த தகவலை பணியகத்தின் | கனியப் பொருட்களுக்கு பெறுமதிகளை சேர்ப்பதற்காக பின்பற்றப்பட வேண்டிய படிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்படுகின்றது. | நூலகத்திடம் இருந்து பெற்றுக்கொள்ள முடியும். | |
| (ii) 28(1) ஆம் பிரிவு | கருங்கல் உற்பத்திகளை கொண்டு செல்வதற்கான அனுமதிப்பத்திரங்கள் வழங்கும் வழிமுறைமையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 1992 இன் 33 ஆம் இலக்க சுரங்கங்கள் மற்றும் கன் அதிகாரச்சட்டத்தின் 28 (4) ஆம் பிரிவின் பிரகாரம் சுரங்கங்களை கொண்டு செல்வதற்கு அனுமதிப்பத்திரம் பெறப்பட வேண்டும். எனினும், கருங்கல் உற்பத்தி (உடைத்தல்) செயன்முறை தொடர்பாக அந்த ஒழுங்குபடுத்தலை தற்போதுள்ள வழிமுறையின் பிரகாரம் அதாவது சுரங்கங்கள் மற்றும் கனிப்பொருட்கள் சட்டம் மற்றும் 2009 இன் 66 ஆம் இலக்க திருத்திய சட்டத்தின் படி சுரங்க அனுமதிப்பத்திரம், தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டத்தின் படி மத்திய சுற்றாடல் அதிகார சபையிடமிருந்து சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் மற்றும் வெடிபொருள் சட்டத்தின் படி வெடிபொருட்களை பயன்படுத்துவதற்கான சட்டம் போன்ற 03 அனுமதி பத்திரங்களின் பிரகாரம் மேற்கொள்ளப்படுகின்றன. கனிப்பொருளின் நிலையான விலையை பேணுவதில் பணியகத்திற்கு பாரிய பொறுப்பு உள்ளதுடன், இந்த ஒழுங்குமுறைக்காக எடுக்கப்பட்ட இந்த வழிமுறைகள் பற்றி சகல வியடங்களையும் ஆராய்ந்த பின் கருங்கற்களுக்காக போக்குவரத்து | அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அனுமதிப்பத்திரங்களை வழங்குவதில்லலை என பணியகம் முடிவு செய்துள்ளது. | |
| (iii) 52 (2) ஆம் பிரிவு | அகழ்வுகளின் பின்னர் அகழ்வு செய்யப்பட்ட நிலங்கள் புனரமைப்பு செய்யப்பட வேண்டுமாயினும் அகழ்வு அனுமதிப்பத்திரம் பெற்ற 1,918 நபர்களினால் அகழ்வு நிலத்தினை புனரமைப்பு செய்ய பணியம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | அகழ்வின் பின்னர் அகழ்வு நிலத்தினை புனரமைக்கும் பணிகளை பணியத்தின் சுரங்க பாதுகாப்பு பிரிவின் மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்படுகிறது. | அகழ்வு செய்யப்பட்ட நிலங்கள் புனரமைக்கப் பட வேண்டும். |
| ஆ) பொது தொழில்முயற்சிகளுக்காக அறிமுகப்படுத்தப்பட்ட 2021 நவம்பர் 16 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது தொழில்முயற்சிகள் சுற்றறிக்கை | | | |
| (i) நிறுவனத்தின் நிர்வாகம் தொடர்பான வழிகாட்டியின் 2.2.5 ஆம் பிரிவு | பணியகத்தின் முகாமைத்துவ சபையினால் நிர்வாக சபை கூட்டங்களில் துணைக் கம்பனியின் செயற்பாடுகளை தொடச்சியாக மதிப்பாய்வு செய்யவும், பணியகத்தை பாதிக்கும் மற்றும் ஏனைய விடயங்கள் பற்றி வழிப்புணர்வு கொள்ளவும், மற்றும் கம்பனிகளுக்கிடையிலான பரிமாற்றங்களை அதவானிக்கவும் வேண்டும். எனினும் அதன்படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | கணக்காய்வின் மூலம் சுட்டிக்காட்டப்பட்ட வியடங்களுடன் உடன்படுவதுடன், எதிர்காலத்தில் அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும். | துணைக் கம்பனியின் செயற்பாடுகள் மீளாய்வு செய்யப்பட வேண்டும். |
| (ii) நிறுவனத்தின் நிர்வாகம் தொடர்பான வழிகாட்டியின் 3.5 ஆம் | அமைச்சரவையின் அனுமதியின்றி உரிய அமைச்சிற்கு | கணக்காய்வின் மூலம் சுட்டிக்காட்டப்பட்ட வியடங்களுடன் | பிற நிறுவனங்களுக்கு |

| | | | |
|---|---|---|---|
| பிரிவு | அல்லது ஏனைய நிறுவனங்களுக்கு ஊழியர்களினை விடுவித்தல் மற்றும் விடுவிக்கப்படுகின்ற ஊழியர்களுக்கு விடுவிப்பிக்கப்பட்ட காலத்தில் சம்பளங்கள் வழங்கப்படக்கூடாது என்றபோதிலும் சனாதிபதி அலுவலகத்தில் இணைக்கப்பட்டுள்ள பதிவாளர் ஒருவருக்கு 2023 பெப்ரவரி 01 முதல் 2023 திசெம்பர் 31 வரை சம்பளமாக ரூபா 963,600 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | உடன்படுவதுடன், எதிர்காலத்தில் அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும். | ஊழியர்களை விடுவிக்கப்பட க் கூடாது. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 1,159,672,376 தொகை இலாபமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 1,969,642,374 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 809,969,998 தொகையான குறைவு அவதானிக்கப்பட்டது. நிதி வருமானம் ரூபா 393,742,056 தொகையினால் அதிகரிக்கப்பட்ட போதிலும், வருமானம் ரூபா 1,454,882,583 தொகையினால் குறைவடைந்தமையும் நிர்வாக செலவினம் ரூபா 137,675,495 தொகையினால் அதிகரித்தமையிமையும் இந்த குறைவிற்கு பிரதான காரணமாக அமைந்தது.

**3.1 செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 பொருளாதமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2022 ஆம் வருடத்தில் ரூபா 1,500,256 தொகை செலவளித்து தலைமை அலுவலக வளாகத்தில் நிறுவப்பட்ட எரிபொருள் தாங்கியனை மீளாய்வாண்டு இறுதி வரையிலும் பயன்படுத்தப்படவில்லை. | எரிபொருள் தாங்கியினை விற்பனை செய்வதற்காக முகாமைத்துவமானது இயக்குனர்கள் சபையின் அனுமதியை பெற்றுள்ளதுடன், மேலும் மனுக்களுக்கான அழைப்பு விடுத்த பிறகு பெறப்பட்ட மனுக்களை கருத்திற்கொண்டு பொருளாதார ரீதியில் எது இலாபகரமானது என்பதை அறிய கிரய நன்மை பகுப்பாய்வு குறித்து இறுதி தீர்மானம் எடுக்கப்பட்டு வருகின்றது. | எரிபொருள் தாங்கி பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) பொலன்னறுவை பிராந்திய அலுவலகத்தினை நிர்மாணிப்பதற்கான ஆலோசனை | பணியகத்திற்கு சொந்தமான காணிகளில் பல்வேறு அபிவிருத்தி பணிகளில் தொழில்நுட்ப | பெறுகை வழிகாட்டுதல்களின் பிரகாரம் செயற்படத் |

சேவைகள் மற்றும் விலைமனு ஆவணங்களினை தயாரிப்பதற்காக பட்டய பொறியியலாளர் ஒருவரின் சேவை பெறப்பட்டு 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரை ரூபா 2,105,200 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இது தவிர, பட்டயப் பொறியியலாளர் பிராந்திய அலுவலக நிர்மாணம் தொடர்பான தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளதுடன் அதனால் பெறுகை நடைமுறையில் அக்கரை முரண்பாடு (Conflict of Interest) ஏற்பட்டிருந்தது. நிர்மாணத்திற்காக 2022 ஏப்ரல் 01 ஆம் திகதி வரை 04 இடைக்கால கொடுப்பனவுகள் மூலம் ரூபா 19,253,840 தொகை, அதாவது ஒப்பந்த பெறுமதியில் 23 சதவீதம் ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டிருந்தும் பணிகளின் பௌதீக செயன்முன்னேற்றம் குறித்து எந்த மதிப்பீடும் செய்யப்பட்டிருக்கவில்லை. இந்த நிர்மாணம் சுமார் 02 ஆண்டுகளாக நிறுத்தப்பட்டுள்ளதால் கட்டிடத்தினை பயன்படுத்த முடியாத நிலையில் இருந்தது.

ஆலோசனைக்காக செயற்திட்ட அடிப்படையில் பணிப்பாளர் சபையின் அனுமதியின் கீழ் அரச சேவையில் ஈடுபட்டுள்ள சிவில் பொறியியலாளர் ஒருவரின் சேவை பெறப்பட்டது. பொலன்னறுவை பிராந்திய அலுவலக நிர்மாண பணிகளில் குறைந்த ஆலோசனை கட்டணத்தில் மேற்படி சிவில் பொறியியலாளர் ஊடாக ஆலோசனை சேவைகள் பெறப்பட்டன. தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு உறுப்பினராக சம்பந்தப்பட்ட பொறியியலாளர் நியமிக்கப்பட்டார்.

தொடர்வுடைய விலைமனு அழைப்பின் பிரகாரம் 14 நிறுவனங்கள் விலைமனுக்களை சமர்ப்பித்திருந்ததுடன் சுயாதீன மதிப்பீட்டு குழு மூலம் குறைந்த விலையில் சமர்ப்பித்த பகுதியளவு அரச நிறுவனமான Central Engineering Services (Pvt) Ltd என்ற நிறுவனம் தெரிவு செய்யப்பட்டது. அப்போது தொழில்நுட்ப அறிவுள்ள சிவில் பொறியியவாளரின் உதவியும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு பெறப்பட்டதுடன் பெறுகை செயன்முறைகள் சுயாதீனமாக நடைபெறவில்லை என்று எவ்வித அவதானிப்புக்களும் காணப்படவில்லை.

இதுவரை ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்ட அனைத்து கொடுப்பனவுகள் செய்யப்பட்ட பணிகளுக்கான கொடுப்பனவுகளின் பௌதீக செயன்முன்னேற்றம் பகுப்பாய்வு செய்யப்பட்டு பழைய ஒப்பந்தக்காரரிடம் பணம் செலுத்த தேவையான படிமுறைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதுவரை ஒப்பந்தக்காரரின் செயற்திறன் பிணையத்தை நீடிதது அவரை பணியகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

புதிய ஆவோசகரின் வழிகாட்டுதலின்படி கட்டிடத்தின் மீதமுள்ள பணிகளை பூரணப்படுத்த தேவையான படிமுறைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதனால் இதுவரை செய்யப்பட்ட செலவுகள்

தவறியமை தொடர்பில் மீண்டும் விசாரணை செய்து, நிர்மாணிக்கப்பட்ட கட்டிடம் பயன்படுத்தப்பட வேண்டும்.

பலனற்றவை அல்ல என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**3.2 முகாமைத்துவ வினைத்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| அ) | ரூபா 513,490,321 தொகையுடைய கடன்பட்டோர் மீதியில் 05 ஆண்டுகளுக்கும் மேலாக மொத்தம் ரூபா 3,207,738 தொகை காணப்படுவதுடன், கணக்காய்வு திகதி வரை இந்த நிலுவைகளை வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இந்த கடன்பட்டோர்கள் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளதுடன், முகாமைத்துவ சபையிடம் சமர்ப்பித்த பிறகு அதன் தீர்மானத்தின் அடிப்படையில் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும். | கடன்களை வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| ஆ) | 2018-2021 காலப்பகுதியில் பணியகத்தின் மூலம் மிகையாக செலுத்தப்பட்ட நிர்வாக அதிகாரிகளின் கையடக்க தொலைபேசி பட்டியல் ரூபா 3,886,701 தொகையினை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் வசூலிக்கப்படவில்லை. | இது குறித்து இப்போது வரை தொடர்புடைய பிரிவுகளுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், அந்த செலவுகளுக்கான அனுமதி கிடைத்தால் அந்த செலவுகள் பதிவளிக்கப்படும் என்றும் அவ்வாறு இல்லாத பட்சத்தில் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரிடமிருந்து வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | தொடர்புடைய உத்தியோகத்தரிடம் இருந்து வசூலிக்கப்பட வேண்டும். |
| இ) | நிறுவன வளத் திட்டமிடல் (ERP) முறைமையினை நிறுவுவதற்காக 2022 ஆம் ஆண்டில் செலவளிக்கப்பட்ட ரூபா 1,661,910 தொகை மீளாய்வாண்டின் இறுதியில் நடைமுறை வேலையின் கீழ் காட்டப்பட்டுள்ளதுடன், 2023 பெப்ரவரி 20 இல் மேற்கூறியவற்றை செயற்படுத்த வேண்டாம் என தீர்மானம் எடுக்கப்பட்டதனை தொடர்ந்து இந்த செலவு பலனற்றதாகியது. இருந்தபோதிலும், பணியகத்தினால் நிறுவன வளத் திட்டமிடல் (ERP) முறைமையினை செயற்படுத்தும் நோக்கத்திற்காக ரூபா 20,394,000. 60 கணினிகளை 2023 பெப்ரவரி 21 இல் கொள்வனவு செய்துள்ளது. கணக்காய்வுத் திகதியான 2024 மார்ச் 15 இல் உள்ளபடியாக ரூபா 4,078,800 பெறுமதியுடைய 12 கணினிகள் களஞ்சியத்தில் விளைவற்றதாக இருந்தன. | பணியகத்திற்காக நிறுவன வளத் திட்டமிடல் (ERP) முறைமையினை நிறுவுவதற்கு 2022 ஆம் ஆண்டில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. 2023 ஆம் ஆண்டில் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட பெறுகை நடவடிக்கைகள் தற்போது முன்னாள் ஆலோசகரின் ஆலோசனையின் கீழ் ஆரம்பிக்கப்பட்டு EOI கட்டம் நிறைவடைந்துள்ளது. முறைமையினை நிறுவது தொடர்பாக கொள்வனவு செய்யப்பட்ட சகல கணினிகளும் தற்போது பிரதேச அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. எதிர்காலத்தில், முறைமை நிறுவப்படும் போது இந்த கணினிகள் பயன்படுத்தப்படும் என்பதோடு அதுவரை பொது சேவைகளை விரைவுபடுத்த தேவையான அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு அந்த கணினிகள் பயன்படுத்தப்படும். | சொத்துக்கள் முறையாக பயன்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| ஈ) | லங்கா மினரல் சேன்டஸ் லிமிட்டட் கம்பனிக்கு வழங்கப்பட்ட EL/406 ஆம் இலக்க ஆய்வு அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடியாகும் காலம் 2022 திசெம்பர் 30 இல் முடிவடைந்துள்ளதுடன், 2023 ஜனவரி 04 ஆம் திகதியிடப்பட்ட 2013/37 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியின் 14(உ) இன் பிரகாரம் அனுமதிப்பத்திரம் பெற்றவர்கள் ஆய்வு செய்தல் முடிந்த நாளில் இருந்து அல்லது அனுமதிப்பத்திரத்தின் காலாவதியாகும் திகதியிலிருந்து இரண்டு வருட காலத்திற்குள் சுரங்க அனுமதிப்பத்திரத்திற்கு விண்ணப்பிக்கவோ அல்லது பொருத்தமான கட்டணத்தை செலுத்துவதன் மூலம் தங்களுக்கு சாத்தியமான பரப்பை தக்கவைத்துக்கொள்ளவோ வாய்ப்பு வழங்கப்பட்டது. தொடர்புடைய ஆய்வுப் பரப்பினை மேலும் உறுதிப்படுத்துவதற்கான நடைமுறைகளை செயற்படுத்துவதற்காக கம்பனிக்கு 02 வார கால அவகாசம் வழங்கப்பட்டது. இருந்த போதிலும், ஆய்வு அனுமதிப் பத்திரத்தில் சேர்க்கப்பட்டுள்ள 07 கட்ட நிலப்பரப்பில் 2023 ஒக்தோபர் 09 முதல் 2025 ஒக்தோபர் 08 வரையான காலப்பகுதியில் ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஏனைய தனியார் கம்பனியொன்றுக்கு EL/434 என்ற ஆய்வு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளது. | பணியகத்தின் மூலம் லங்கா மினரல் சேன்ட்ஸ் லிமிட்டட் கம்பனிக்கு 2022 திசெம்பர் 30 திகதியுடன் முடிவடையும் வண்ணம் கால நீடிப்புக்களுடன் ஏறக்குறைய 10 ஆண்டுகளுக்கு வழங்கியுள்ளது. இங்கு ஒதுக்கப்பட்ட பரப்பில் எவ்வித ஆராய்ச்சி அறிக்கையோ அல்லது செயன்முன்னேற்ற அறிக்கைகளோ சமர்ப்பிக்கப்படாததால் ஆராய்ச்சி அனுமதிப்பத்திரங்களின் செல்லுபடியாகும் காலம் 2022 திசெம்பர் 30 ஆம் திகதி முடிவடைந்தாலும் தொழிற்துறை அமைச்சு மற்றும் சுற்றாடல் அமைச்சு மூலம் எடுக்கப்பட்ட முடிவுகளின் படி அனுமதிப்பத்திரத்தின் காலாவதி திகதியிலிருந்து 06 மாதங்களுக்குள் ஆராய்ச்சி செய்யும் பரப்பின் நில உரிமையை பெறுவதற்கும், பிற தேவைகளை வழங்குவதற்கும் தெரிவிக்கப்பட்டது.<br>அந்த உடன்படிக்கையின் படி லங்கா மினரல் சேன்ட்ஸ் லிமிட்டட் கம்பனி இது வரை அறிக்கைகளை பூர்த்தி செய்யவில்லை என்பதுடன், ஆராய்ச்சி பரப்பினை ஒதுக்கீடு செய்வதற்காக பதிவுத் தபால் மூலம் அவ்வப்போது காசோலைகள் அனுப்பப்பட்டு வருகின்றன. அதன் படி, செலுத்த வேண்டிய உரிய கட்டணங்கள் மற்றும் வழங்கப்பட வேண்டிய விபரங்களை உள்ளடக்கிய அறிக்கைகளை வழங்குமாறு பணியகம் மீண்டும் கடிதங்கள் ஊடாக அறிவித்துள்ளது.<br><br>பணியகத்திற்கு அந்த முழுமையற்ற கட்டணங்களினதும் ஆவணங்களுக்களினதும் பணத்தை வசூலிக்க சுரங்க மற்றும் கனியப்பொருள் அதிகாரசட்டம் மற்றும் பிரமாணங்களின் பிரகாரம் மேற்கொள்ள முடியாது. அனுமதிப்பத்திரங்களினை பெற்றுக்கொண்டு எவ்வித ஆராய்ச்சிகளையோ அல்லது அகழ்வததற்கோ அல்லது | ஆராய்ச்சி அனுமதிப் பத்திரங்களின் செல்லுபடியாகும் காலத்தினை நீடித்து வழங்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பணிகளை மேற்கொள்ளாமை பணியகத்திற்கு பிரச்சினையான இருந்தமையினால், இது தொடர்பில் தொழில்துறை அமைச்சு மற்றும் சுற்றாடல் அமைச்சு மூலம் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கு அமைவாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.<br><br>இலங்கை கனிய மணல் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட ஒரு ஆராய்ச்சி அனுமதிப்பத்திர பரப்பிற்காக EX/434 ஆம் இலக்கம் கொண்ட ஆராய்ச்சி அனுமதிப்பத்திர தனியார் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. அந்த நிறுவனத்தின் ஆய்வு நடவடிக்கைகளில் மேற்கொள்ளும் போது அந்தப் பரப்பு வனவிலங்கு கோட்டத்திற்கு சொந்தமானது என தெரிய வந்தது. அதன்படி, தற்போது அந்த ஆராய்ச்சி அனுமதிப்பத்திர அமுல்படுத்தப்பட முடியாத சூழ்நிலை காணப்படுகிறது. அந்த பரப்பு லங்கா மினரல் சேன்ட் நிறுவனத்திடம் இருந்து பெறப்பட்டாலும் ஆராய்ச்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டால் அந்த நிறுவனத்திற்கும் இதே நிலைதான் ஏற்படும் என்பதனால் அந்த பரப்பிற்காக அனுமதிப்பத்திரம் வழங்க முடியாத சூழ்நிலை காணப்படுகின்றது. | |
| உ) | மேல் எலஹெர கால்வாயின் 4 ஆவது சுரங்கப்பாதையை (Tunnel 4) அகழ்வதற்கு மேல் எலஹெர கால்வாய் செயற்திட்டத்திற்கு பணியகத்தினால் வழங்கப்பட்ட IML/A/HO/N/15134/LR/2 ஆம் இலக்க அனுமதிப்பத்திரத்தை பயன்படுத்தி மூன்றாவது சுரங்கப்பாதையில் (Tunnel 3) 5.77 கி.மீ தூரம் அகழப்பட்ட போதிலும் இது தொடர்பில் பணியகம் எவ்வித ஒழுங்குமுறையும் செய்யப்படவில்லை. | சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையின் மூலம் சகல பகுதிகளையும் உள்ளடக்கி வழங்கப்பட்ட வழிகாட்டுதல்களுக்கு அமைய பணியகத்தினால் தேசிய அளவிலான நிகழ்ச்சித்திட்டமாக கருத்திற்கொள்ளப்பட்டு இந்த சுரங்க அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டது. தொடர்புடைய அதிகாரச்சட்டம் மற்றும் பிரமாணங்களின் கீழ் உள்ள சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் பெரிய அளவிலான "IML/A" வகைகயுடைய செயற்திட்டத்திற்கு பாதுகாப்பான சுரங்க பணிகளை | தேவையான ஒழுங்குவிதிகள் செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | நிறைவேற்றுவதற்காக பயன்படுத்தப்படுகின்ற இயந்திரங்கள் குறித்து எந்த தடையும் விதிக்க முடியாது. | |
| ஊ) | இலங்கையில் பொஸ்பேட் கனிப்பொருள் குறித்து, பணியகத்தினால் மேற்கொள்ளப்படும் பொஸ்பேட் கனிப்பொருள் ஆய்வு வரைக்கும் எந்தவொரு ஒப்பந்தத்திலும் ஈடுபடுவது 2000 யூன் 02 ஆம் திகதிய SE(FR)884-99 ஆம் இலக்கமுடைய புலன்குளம் எதிர் தொழில்துறை அமைச்சின் செயலாளர் மற்றும் ஏனைவர்கள் தொடர்பான வழக்கின் மூலம் சட்டவிரோதமானதாகும் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக தேசிய விஞ்ஞான பேரவை மற்றும் தேசிய விஞ்ஞான மன்றத்தின் ஆலோசனையின் கீழ் பணியகத்தின் மூலம் இலங்கையில் அபாடைட் மற்றும் ஏனைய பொஸ்பேட் கனியம் தொடர்பில் விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அறிக்கையொன்றினை வெளியிட வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டது. அதன்படி 22 வருட காலத்திற்கு பின்னர் பணியகத்தினால் எப்பாவல பொஸ்பேட் வைப்பு தொடர்பாக நடத்திய ஆய்வின் அறிக்கையினை தேசிய விஞ்ஞான மன்றம் மற்றும் தேசிய விஞ்ஞான அகடமி ஆகியவற்றின் பரிந்துரைகளை பெறுவதற்கு முன்னர் 2023 யூன் 21 ஆம் திகதி பணியகத்தின் அதிகாரபூர்வ வலைதளம் மற்றும் பத்திரிகை மூலம் பிரசுரிக்கப்பட்டது. 2023 ஆகஸ்ட் 25 ஆம் திகதியன்று தேசிய விஞ்ஞான மன்றத்தின் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரை அறிக்கை ஊடாக நீதிமன்றத்தினால் உத்தரவிடப்பட்ட பணிகளை சரியாக செய்வதற்கு பணியகம் தவறிவிட்டதாகவும், ஆய்வு அறிக்கையினை தேசிய விஞ்ஞான மன்றம் அனுமதிக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. வழக்குத் தீர்ப்பிற்கு அமைய தேசிய விஞ்ஞான மன்றம் ஒப்புதல் அளித்த பின் ஆய்வு அறிக்கையினை பகிரங்கப்படுத்த வேண்டும் என்பதோடு பணியகத்தினால் ஏற்றுமதி அனுமதிப்பத்திரங்களும் வழங்கப்பட வேண்டுமாயினும் இலங்கை பொஸ்பேட் கம்பனியினால் தெரிவு செய்யப்பட்ட பொஸ்பேட் ஏற்றுமதியாளர்களுக்கு பணியகத்தின் ஊடாக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளதுடன், இரண்டு தனியார் ஏற்றுமதியாளர்கள் ஊடாக 7,500 மெட்றிக் டொன் மற்றும் 2,350 மெட்றிக் டொன் | புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தினால் வெளியிடப்பட்ட எப்பாவெல பொஸ்பேட் பற்றிய அறிக்கை, தேசிய விஞ்ஞான மன்றம் மற்றும் தேசிய விஞ்ஞான அகடமி என்பவற்றின் ஒப்புதலுக்கு உட்பட்டு சட்டமா அதிபரின் ஆலோசனையின் பிரகாரம் வெளியிடப்பட்டது. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ''புதிய'' பரிந்துரைகள் பற்றி அறிக்கை வெளியிடப்பட்ட நேரத்தில் எந்தக் குறிப்பும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களினால் சமர்ப்பிக்கபடவில்லை. பணியகத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் அதன் செயற்திட்டம் மற்றும் அதன் அடிப்படையிலான நடைமுறை நிலைமை ஆகியவற்றினை அறிக்கையில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளன. சரியான தீர்மானமாக உரிய அதிகாரிகளால் உறுதி செய்யப்பட்டால், நீதிமன்ற தீர்ப்பு தொடர்பாக இந்த ஆய்வினை நடத்துவதற்கான வழிமுறை குறித்து பணியகத்திடம் தெரிவிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. தேசிய விஞ்ஞான மன்றத்தின் அனுமதியுடன் இந்த அறிக்கை வெளியிடப்பட்டது. ஏற்றுமதி அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கும் அறிக்கையினை வெளியிடுவதற்கும் தொடர்பு உள்ளது எனவும் கனியப்பொருள் ஏற்றுமதிக்கான அனுமதிப்பத்திரம் வழங்குவது தனித்தனியாக பரிசீலிக்கப்படுகிறது எனவும் தெளிவாகின்றது. பணியகத்தினால் ஏற்றுமதியாளர்களை தெரிவு செய்யும் போது திறந்த விலைமனு நடைமுறை பின்பற்றப்பட வேண்டும் என தொழிற்துறை அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. ஏற்றுமதியாளர்களை தெரிவு | ஏற்றுமதி அனுமதிப் பத்திரங்கள் சட்ட ஏற்பபாடுகளின் பிரகாரம் வழங்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெறுமதியுடைய பொஸ்பேட் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. | செய்வது தொழில்துறை அமைச்சின் பொறுப்பாகும் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. | |
| எ) | சட்டவிரோத கனிப்பொருள் அகழ்வு, தயாரிப்பு, கனிப்பொருள் வர்த்தகம் ஆகியவற்றை சோதனையிடும் நோக்குடன் அமுலாக்கல் அலகு நிறுவப்பட்டிருந்தாலும் அங்கீகரிக்கப்பட்ட 06 அமுலாக்கல் உத்தியோகத்தர் பதவிகளில் மீளாய்வாண்டின் இறுதியில் 03 பதவிகள் வெற்றிடமாக இருந்தன. இதன் காரணமாக, 2021 ஆம் ஆண்டில் 184 இருந்த சுரங்க நில பரீட்சிப்பானது 2023 ஆம் ஆண்டில் 57 ஆக குறைவடைந்ததுடன், 2021 ஆம் ஆண்டில் 835 ஆக இருந்த முறைப்பாடுகளின் விசாரணை 2023 ஆம் ஆண்டில் 204 ஆக குறைவடைந்தது. | தற்போது அங்கீகரிக்கப்பட்ட அமுலாக்கல் உத்தியோகத்தர் பதவிகளை ஆட்சேர்ப்பு செய்வதற்கான மேலதிக பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | அமுலாக்கல் அலகு செயல்படுத்தப்பட வேண்டும். |
| ஏ) | பணியகத்தின் சுரங்கப் பிரவு மற்றும் கணக்குப் பிரிவினால் பயன்படுத்தப்படும் மென்பொருள் முறைமைகள் 20 வருடங்களுக்கு மேல் பழமையானதாகும், மற்றும் வருடாந்தம் ரூபா 1,050,000 தொகை பராமரிப்பு செலவாக தனியார் கம்பனிக்கு செலுத்தி பயன்படுத்தப்பட்டு வருகின்ற போதிலும் பணியகத்தின் தற்போதைய செயற்பாடுகள் மற்றும் நிதித் தேவைப்பாடுகளுக்கு ஏற்ப அகழ்வதற்கான அனுமதிப்பத்திரங்களினை வழங்குதல், அரசுரிமைப்பணத்தினை கணிப்பீடு மற்றும் பட்டியல்களினை வழங்குதல், கட்டணங்கிளினை வசூலித்தல், வங்கி உத்தரவாதங்களை பெறுதல், சுரங்க நிலத்தை புனரமைப்பு செய்தல், சுரங்க அனுமதிபத்திரங்களை ரத்து செய்தல், கட்டணங்களை மீளப்பெறல் போன்றவைகளும், மற்றும் கணக்குப்பிரிவு தொடர்பான வசதிகளும் புதுப்பிக்கப்படவில்லை. | இந்த மென்பொருள் முறைமை தொடர்பாக தேவைப்படும் புதுப்பித்தல் செலவு அதிகம் என்பதால் தற்போது புதிய மென்பொருள் முறைமையொன்றினை நிறுவுவதற்கு பணியகம் நடவடிக்கை எடுக்கிறது. மேலும், இந்த மென்பொருள் முறைமைக்கு செலுத்தப்பட்ட ரூபா 1,050,000 தொகையானது, பணியகத்தின் தலைமை அலுவலகம் மற்றும் 21 பிராந்திய அலுவலகங்களுக்கிடையிலான தினசரி செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு ஆண்டுதோறும் செலுத்தப்பட்ட பராமரிப்புச் செலவாகும். | மென்பொருள் புதுப்பிக்கப்பட வேண்டும். |
| ஐ) | 1992 இன் 33 ஆம் இலக்க சுரங்கங்கள் மற்றும் கனியப்பொருள் சட்டத்தின் 52 (2) ஆம் பிரிவின் பிரகாரம் நிலம் அகழ்வு செய்த பின்னர் அவை புனரமைக்கப்பட வேண்டுமாயினும் கருங்கற்களுக்கான சுரங்க அனுமதிகளை வழங்கும் போது பணியத்தினால் சுரங்கத் தொழிலாளர்களிடமிருந்து பெறப்பட்ட பொருளாதார வாழ்வியல் அறிக்கைகளில் ‘‘கருங்கல் சுரங்கத்திற்குப் பிறகு தரைமட்டத்தை சுற்றியுள்ள சமவெளிப் பகுதி நிலத்தை விட உயர்வாக உள்ளமையினால் நிரப்பத் வேவையில்லை மற்றும் | அகழ்வு நில புனரப்பு தொடர்பில் வங்கி உத்தரவாதம் மற்றும் முறையானதொரு புனரமைப்பு திட்டம் என்பவற்றுக்காக பணியகம் மற்றும் அனுமதிப்பத்திரம் பெற்றவர்களுக்கிடையில் ஒரு சட்ட ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன், உடன்படிக்கையின் பிரகாரம் சுரங்க நிலம் புனரமைக்கப்படாவிட்டால் அனுமதிப்பத்திர நிபந்தனைகளை | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சுரங்க நிலம் புனரைக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| அகற்றப்பட்ட மேல் மணலை புனரமைத்த பிறகு பயிர்ச்செய்கை மற்றும் ஏனைய பொருத்தமான தேவைகளுக்கு நிலத்தனை பயன்படுத்த முடியும்'' என்று சேர்க்கப்பட்டிருப்பதனால் நில புனரமைப்புக்கான வங்கி உத்தரவாதங்கள் பெறப்படவில்லை. மேலும், கருங்கல் புனரமைப்பு செய்யும் போது தற்போதுள்ள தரை மட்டத்தில் இருந்து மேற்பரப்பின் கீழே அகழ்வு செய்யக்கூடாது என்று அனுமதிப்பத்திர நிபந்தனைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், பெரும்பாலான கருங்கற்களுக்கான அகழ்வு தரைமட்டத்திற்கு கீழே அகழ்வு செய்யப்பட்டதனால் அவற்றில் குழிகளில் தண்ணீர் நிரம்பி ஆபந்தான நிலையில் கைவிடப்பட்டது. இந்த குழிகளை புனரமைப்பதற்கும், சுரங்க அனுமதிப்பத்திர நிபந்தனைகளை மீறியமை தொடர்பில் சட்ட வழிமுறை எடுப்பதற்கும் பணியகம் நடவடிக்கை எடுக்கவில்லை. | மீறியமை மற்றும் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்படாமை தொடர்பாக தேவையான சட்ட ஏற்பாடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. | |

**4. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 செயல்நடவடிக்கை திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அ) 1992 இன் 33 ஆம் இலக்க சுரங்கம் மற்றும் கனிப்பொருள் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கையில் முறையானதொரு புவியியல் வரைபடத்தைத் தயாரிப்பது தொடர்பாக மீளாய்வாண்டின் செயல் நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள பணிகள் மற்றும் செயல்திறன் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) இலங்கை புவியியல் வரைபடத்தினை தொகுத்தல் மற்றும் அச்சிடுதல் என்பவற்றினை 2022 ஏப்ரல் மாதத்தினுள் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்ட போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அச்சிடும் பணிகள் பூர்த்தி செய்யப்படவில்லை. | தற்போது வில்பத்து வரைபட அச்சிடும் பணிகள் நிறைவடைந்துள்ளன. | செயல் நடவடிக்கை திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்தினுள் முடிக்கப்பட வேண்டும். |
| (ii) 2022 ஏப்ரல் மாதமளவில் 1:50,000 நாலாந்தர வரைபடத்தின் கீழ் கற்பிட்டி வரைபட இல. 29 இனை அச்சிட திட்டமிடப்பட்ட அதே வேளை வில்பத்து கோட்டத்தின் வரைபடத்தினை 2023 மே மாதமளவில் அச்சிட திட்டமிடப்பட்ட | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்தப் பணிகள் பூர்த்தி செய்யப்படவில்லை. | | |
| | (iii) மீளாய்வாண்டின் மார்ச் மாதமளவில் அச்சிடுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த வவுனியா – திருகோணமலை 06 ஆம் இலக்க மணல் புவி இரசாயன வரைபடமானது மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அச்சிடப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| | (iv) வட மத்திய மாகாணத்தின் 08 ஆம் இலக்க வரைபடத்தை தொகுத்து அச்சிடுவதற்கு மீளாய்வாண்டின் ஒக்தோபர் மாதமளவில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்ட போதிலும் தொகுத்தல் பணிகள் மாத்திரமே நிறைவடைந்துள்ளன. | - மேற்படி - | - மேற்படி - |
| ஆ) | 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான கனியப்பொருள் கையேடுகள் கணக்காய்வு திகதியான 2024 ஏப்ரல் 30 வரையிலும் வெளியிடப்படவில்லை. | வருடாந்த கனியப்பொருள் கையேடு வெளியீடு தொடர்பாக பணியகத்தின் தரவுகள், கனிப்பொருள் வணிகங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களின் தரவுகள் என்பன சேகரிக்கப்பட்டுள்ளது. இவற்றில் பல்வேறு கனிப்பொருட்களின் உற்பத்தி அளவு, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி அளவு பற்றிய தரவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், இந்த கம்பனிகள் உரிய நேரத்தில் தரவுகளை வழங்காமையினாலும், இலங்கை சுங்கம் போன்ற நிறுவனங்கள் தரவை வழங்குவதற்கு கட்டணங்கள் வசூலிப்பதனாலும் இந்த கையேட்டினை உரிய நேரத்தில் வெளியீடு செய்ய முடியவில்லை. | செயல்நடவடிக்கை திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நடவடிக்கைகளை செயற்படுத்த வேண்டும். |
| இ) | 2017 மே 22 இல் அமைச்சரவையின் அறிவிப்பின் பிரகாரம் கனிபொருள் வளங்கள் தொடர்பான தேசிய கொள்கை தயாரிக்கப்பட்டு அனுமதியை பெற கணக்காய்வு திகதியான 2024 யூலை 16 வரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | கனிப்பொருள் வளங்கள் தொடர்பான தேசிய கொள்கை தயாரிக்கப்பட்டு அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ளது. | அமைச்சரவையின் தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |